MAY 2025 **U/ID 22221/UCZ3A/UCW3A/ UCY3A/UCV3B**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define the term Share.

   பங்கு என்ற பதத்தை வரையறுக்க.

2. What is a secured debenture?

   பிணையக் கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன?

3. What is the Capital Redemption Reserve and why is it created during the redemption of preference shares?

   மூலதன மீட்பு இருப்பு என்றால் என்ன? முன்னுரிமைப் பங்குகளை மீட்பின் போது அது ஏன் உருவாக்கப்படுகிறது?

4. What is "Profits Prior to Incorporation"?

   "கூட்டுருவாக்கத்திற்கு முந்தைய லாபம்" என்றால் என்ன?

5. Mention the purpose of Schedule III in the preparation of financial statements.

   நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில் அட்டவணை III இன் நோக்கத்தைக் குறிப்பிடவும்.

6. How is managerial remuneration computed under the Companies Act, 2013?

   நிறுவனச் சட்டம் 2013ன் கீழ் நிர்வாக ஊதியம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

7. List out the various methods of valuation of goodwill.

   நற்பெயர் மதிப்பிடுவதற்கான பல்வேறு முறைகளை பட்டியலிடுக.

8. What is the difference between intrinsic value and market value of shares?

   பங்குகளின் உள்ளார்ந்த மதிப்புக்கும் சந்தை மதிப்புக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?

9. Define "capital reduction".

   "மூலதனக் குறைப்பு" என்பதை வரையறுக்கவும்.

10. What is the primary objective of reducing share capital?

பங்கு மூலதனத்தைக் குறைப்பதன் முக்கிய நோக்கம் என்ன?

11. Calculate goodwill, if it is to be calculated at 3 years' purchase of the super profit. The firm started business with a capital of Rs. 4,00,000. The normal rate of earning in this class of business is 15%. The firm earned Rs. 74,000 as profit during the year.

நற்பெயரை கணக்கிடுக. இதை கணக்கிட வேண்டுமானால் உயர் லாபத்தில் 3 ஆண்டுகன் என கொள்முதல் இருக்கும். நிறுவனம் ரூ.4,00,000 மூலனத்துடன் வணிகத்தைத் தொடங்கியது. இந்த வகை வணிகத்தில் சராசரி வருவாய் விகிதம் 15% ஆகும். நிறுவனம் ஆண்டின் இலாமாக ரூ.74,000 ஐ ஈட்டியது.

12. Redemption of 20,000 preference shares of Rs. 100 each was carried out by utilization of reserves and by issue of 8,000 equity shares of Rs. 100 each at Rs. 125. How much should be credited to capital redemption reserve account?

காப்புகளை பயன்படுத்துவதன் மூலம் மற்றும் ரூ.100 மீதமுள்ள பங்குகளை ரூ.125க்கு வெளியிடுவதன் மூலமும் ரூ.100 வீதமுள்ள 20,000 முன்னுரிமைப் பங்குகள் மீட்கப்பட்டது. மூலதன மீட்பு காப்புக் கணக்கில் எவ்வளவு வரவு வைக்கப்பட வேண்டும்?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. The directors of 'Z' Co. Ltd. forfeit 10 shares of Rs. 50 each belonging to 'Karthik' who had paid Rs. 5 per share on application, Rs. 10 on allotment and Rs. 15 on first call but failed to pay the final call of Rs. 20. The same shares are then reissued to 'Raj' as fully paid on receipt of Rs. 400. Pass journal entries to record the forfeiture and reissue of shares.

'இசட்' கோ லிமிடெட் இயக்குநர்கள் ரூ.50 வீதமுள்ள 10 பங்குகளை கார்த்திக்கிடம் இருந்து பறிமுதல் செய்தனர். அவர் பங்கு ஒன்றுக்கு விண்ணப்பத்தின் போது ரூ.5, ஒதுக்கீட்டின் போது ரூ.10 மற்றும் முதல் அழைப்பின் போது ரூ.15ம் செலுத்தினார். ஆனால் இறுதி அழைப்பு தொகை ரூ.20 ஐ செலுத்த தவறினார். அப்பங்குகள் ரூ.400 முழுவதும் செலுத்துவதாக ராஜ் என்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டை பதிவு செய்வதறகான குறிப்பேட்டு பதிவுகளை தருக.

14. You are required to calculate the Time ratio for the Pre and Post incorporations period from the following particulars :

(a) Date of Incorporation : 1st June 2021

(b) Period of financial accounts : April 2021 to March 2022

(c) Total wages : Rs. 4,800

(d) Number of workers :

Pre Incorporation Period : 5

Post Incorporation Period : 25

Also divide the total wages' between Pre and Post Incorporation Periods.

பின்வரும் விவரங்களிலிருந்து கூட்டிணைப்புக்கு முன் மற்றும் பிந்தைய காலத்திற்கான நேர் விகிதத்தை நீவிர் கணக்கிடுக.

(அ) கூட்டுறுவாக்க தேதி : 1 ஜூன் 2021

(ஆ) நிதி கணக்குகளின் காலம் : ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரை

(இ) மொத்த ஊதியம் : ரூ. 4,800

(ஈ) தொழிலாளர்களின் எண்ணிக்கை :

கூட்டுறுவாக்கத்திற்கு முந்தைய காலம் : 5

கூட்டுறுவாக்கத்திற்கு பிந்தைய காலம் : 25

கூட்டுறுவாக்கத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களுக்கு இடையில் மொத்த ஊதியங்களை பிரிக்கவும்.

15. The following balances extracted from the company records. Calculate the remuneration of the managing director at 5% of the Net profit, after charging such commission.

		Rs.
	Net Profit	38,786
	Items Considered for arriving at the above net profit :	
(a)	Provision for taxation	39,000
(b)	Managing Director's remuneration paid	12,000
(c)	Formation expenses written off	4,000
(d)	Directors fees	2,500
(e)	Provision for doubtful debts	1,200
(f)	Depreciation allowable as per income tax rules	12,000
(g)	Depreciation written off	12,800
(h)	Ex-gratia payment to employee (without any liability to the company)	2,000

நிறுவனத்தின் பதிவுகளிலிருந்து பின்வரும் இருப்புகள் எடுக்கப்பட்டது. கழிவுக்குப்பின் உள்ள நிகர லாபத்தில் நிர்வாக இயக்குநரின் ஊதியத்தை 5% கணக்கிடுக.

		ரூ.
	நிகர லாபம்	38,786
	மேற்கண்ட நிகர லாபத்தை அடைவதற்கு கருதப்படும் விவரங்கள் :	
(அ)	வரிவிதிப்பு	39,000
(ஆ)	நிர்வாக இயக்குநருக்கு செலுத்திய ஊதியம்	12,000
(இ)	அமைப்பு செலவுகள் போக்கெழுதியது	4,000
(ஈ)	இயக்குநர்கள் கட்டணம்	2,500
(உ)	வாரா ஐயக்கடன் ஒதுக்கு	1,200
(ஊ)	வருமான வரி விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட தேய்மானம்	12,000
(எ)	தேய்மானம் நீக்கியது	12,800
(ஏ)	ஊழியருக்கு மிகை ஊக்கத்தொகை செத்தியது (நிறுவனத்திற்கு எந்தப் பொறுப்பும் இல்லாமல்)	2,000

16. From the following information, calculate the value per equity share :

1,000 9% preference shares of Rs. 100 each	Rs. 1,00,000
1,00,000 equity shares of Rs. 5 each	
Rs. 2 per share paid up	Rs. 2,00,000
Expected profits per year before tax	Rs. 1.09,000
Rate of tax	50%
Transfer to general reserve	20% of the net profits.

பின்வரும் தகவல்களிலிருந்து ஒரு பொதுநிலை பங்குக்கான மதிப்பைக் கணக்கிடு

1,000 9% முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம்	ரூ. 1,00,000
1,00,000 பொதுநிலை பங்குகள் ரூ. 5 வீதம்	
ஒரு பங்கிற்கு ரூ. 2 செலுத்தியது	ரூ. 2,00,000
வரிக்கு முன் ஓர் ஆண்டுக்கு எதிர்பார்க்கப்படும் இலாபம்	ரூ. 1.09,000
வரி விகிதம்	50%
ஒவ்வொரு ஆண்டும் பொதுக்காப்புக்கு மாற்றுவது	நிகர லாபத்தில் 20%

17. Balance Sheet of a company as on 31st March 2019.

Liabilities	Rs.	Assets	Rs.
Share capital (Rs. 10)	1,00,000	Fixed assets	50,000
Creditors	50,000	Current assets	30,000
		Profit and Loss a/c	50,000
		Goodwill	20,000
	1,50,000		1,50,000

Reduce Rs. 7 per share and wipe of losses. Give journal entries.

31 மார்ச் 2019 நிலவரப்படி ஒரு நிறுவனத்தின் இருப்புநிலை குறிப்பு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல் (ரூ.10)	1,00,000	நிலை சொத்துக்கள்	50,000
கடனீந்தோர்கள்	50,000	நடப்பு சொத்துக்கள்	30,000
		இலாப நட்ட க/கு	50,000
		நற்பெயர்	20,000
	1,50,000		1,50,000

ஒரு பங்கிற்கு ரூ. 7 குறைக்கப்பட்டது மற்றும் நட்டத்திற்கு வழிவகை செய்யப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

18. Identify the different types of shares issued by a company.

ஒரு நிறுவனத்தால் வெளியிடப்படும் பல்வேறு வகையான பங்குகளை அடையாளம் காணவும்.

19. What are the legal provisions relating to reduction of share capital?

பங்கு மூலதனத்தைக் குறைப்பது தொடர்பான சட்ட விதிகள் யாவை?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Ram Ltd., issued to the public 5,000 shares of Rs. 100 each at a discount of 5% payable as follows :

On application	Rs. 25 per share
On allotment	Rs. 34 per share
On first and final call	Rs. 36 per share

Applications were received for 4,800 shares and all of these were accepted. All the money due was received except the first and final call on 300 shares which were forfeited. 200 of these shares were reissued at Rs. 90 as fully paid. Show necessary journal entries.

ராம் லிமிடெட் 5,000 பங்குகளை ரூ. 100 வீதம் 5% தள்ளுபடியில் பின்வருமாறு செலுத்துவண்ணம் வெளியிட்டது.

விண்ணப்பத்தில் ஒரு பங்கிற்கு ரூ.25

ஒதுக்கீட்டில் ஒரு பங்கிற்கு ரூ. 34

முதல் மற்றும் இறுதி அழைப்பில் ஒரு பங்கிற்கு ரூ. 36

4,800 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவை அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 300 பங்குகளுக்கான முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகையை தவிர ஏனைய பங்குகளுக்கான நிலுவை தொகை அனைத்தும் பெறப்பட்டது. இப்பங்குகள் ஒருபிழப்பு செய்யப்பட்டது. இவற்றில் 200 பங்குகள் ரூ. 90 முழுவதும் செலுத்தப்பட்டவையாக மறுவெளியீடு செய்யப்பட்டது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை காட்டுக.

21. Following is the Balance sheet of X Ltd., as on 31.3.2018.

Liabilities	Rs.	Assets	Rs.
4,00,000 equity shares		Plant and Machinery	25,00,000
of Rs. 10 each	40,00,000	Furniture	9,00,000
14% Redeemable		Investments	3,50.000
preference shares		Stock	15.00.000
60,000 @ Rs. 20 each	12,00,000	Debtors	14.00.000
Profit & Loss account	7,00,000	Bank balance	3,50.000
Sundry creditors	11,00,000		
	70,00,000		70,00,000

The preference shares are redeemable at a premium of 5% on 1.4.2018, it was decided :

(a) To sell the investments for Rs. 3,00,000.

(b) Utilize Rs. 5,00,000 from P & L account.

(c) To issue sufficient equity shares of Rs. 10 each at a premium of Rs. 2 per share to raise the balance of funds required. All the above decisions were fully carried out and the preference shares were fully redeemed.

Pass the journal entries to record the above and show balance sheet after redemption.

31.3.2018 நிலவரப்படி எக்ஸ் லிமிடெட் இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
4,00,000 பொதுநிலை		பொறி மற்றும் இயந்திரங்கள்	25,00,000
பங்குகள் ரூ. 10 வீதம்	40,00,000	அறைக்கலன்	9,00,000
60,000 14% மீட்பு		முதலீடுகள்	3,50,000
முன்னுரிமை பங்குகள்		சரக்கிருப்பு	15,00,000
ரூ. 20 வீதம்	12,00,000	கடனாளிகள்	14,00,000

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
இலாப நட்டக் கணக்கு	7,00,000	வங்கி இருப்பு	3,50,000
பற்பல கடனீந்தோர்கள்	11,00,000		
	70,00,000		70,00,000

1.4.2018 அன்று 5% முனைமத்தில் முன்னுரிமை பங்குகள் மீட்டெடுக்கப்படுகின்றன. இதில் முடிவு செய்யப்பட்டது.

(அ) முதலீடுகளின் விற்பனை ரூ. 3,00,000 ஆகும்

(ஆ) இலாபநட்டக் கணக்கிலிருந்து ரூ. 5,00,000 பயன்படுத்தப்படும்

(இ) போதுமான பொதுநிலை பங்குகளை ரூ. 10 வீதம் தேவையான நிதியின் நிலுவையை உயர்த்த ஒரு பங்கிற்கு ரூ. 2 முனைமத்தில் வெளியிட்டது. மேலே உள்ள அனைத்து முடிவுகளும் முழுமையாக மேற்கொள்ளப்பட்டன மற்றும் முன்னுரிமை பங்குகள் முழுமையாக மீட்கப்பட்டன.

மேலே உள்ளவற்றை பதிவு செய்வதற்கான குறிப்பேட்டு பதிவுகளை தந்து மேலும் மீட்பிற்குப் பிறகு இருப்புநிலைக் குறிப்பையும் காட்டுக.

22. The following Trial balance Nallis Ltd., as at 30th December 2018 is given to you :

Debit	Rs.	Credit	Rs.
Stock (1.1.2018)	80,000	8,000 equity shares of	
Bank	17,600	Rs. 100 each.	
Patents	60,000	Rs. 75 paid	6,00,000
Calls-in-arrears	20,000	6% Debentures	2,00,000
Return inwards	30,000	Sundry creditors	1,00,000
Purchases	7,72,000	General reserve	80,000
Wages	1,08,000	Sales	10,00,000
Insurance prepaid	400	Return outward	20,000
Bills receivable	30,000	P & L account (Cr.)	12,000
Sundry debtors	80,000		
Discount on issue			
of debentures	10,000		
Plant and Machinery	4,00,000		
Land and Buildings	3,00,000		
Insurance	4,000		

Debit	Rs.	Credit	Rs.
General expenses	40,000		
Establishment			
expenses	60,000		
	20,12,000		20,12,000

Additional information :

(a) The value of stock on 31st December 2018 was Rs. 74,000

(b) Outstanding wages totaled Rs. 10,000

(c) A provision 5% is to be created on sundry debtors for doubtful debts.

(d) Depreciate Patents @ 10% and Plant & Machinery @ 7½% and on Land and Buildings @ 4%.

You are required to prepare statement of Profit & Loss for the year ended 3 1.12.2018 and Balance sheet as on that date.

நல்லிஸ் லிமிடெடின் 30, டிசம்பர் 2018க்கான பின்வரும் இருப்பாய்வு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பற்றுகள்	ரூ.	வரவுகள்	ரூ.
சரக்கிருப்பு (1.1.2018)	80,000	8,000	
வங்கி	17,600	பொதுநிலை பங்குகள்	
காப்புரிமைகள்	60,000	ரூ.100 வீதம்	
நிலுவை அழைப்புகள்	20,000	ரூ. 75 செலுத்தியது	6,00,000
உள்திருப்பம்	30,000	6% கடனீட்டு	
கொள்முதல்	7,72,000	பாத்திரங்கள்	2,00,000
கூலி	1,08,000	பற்பல கடனீந்தோர்கள்	1,00,000
முன்கூட்டி செலுத்திய காப்பீடு	400	பொதுக்காப்பு	80,000
பெறுவதற்குரிய மாற்றுசீட்டு	30,000	விற்பனை	10,00,000
பற்பல கடனாளிகள்	80,000	வெளித்திருப்பம்	20,000
கடனீட்டுப்பத்திரம் வெளியீடு மீதான தள்ளுபடி	10,000	லாப நட்ட கணக்கு (வ)	12,000
பொறி மற்றும் இயந்திரம்	4,00,000		
நிலம் மற்றும் கட்டிடங்கள்	3,00,000		
காப்பீடு	4,000		
பொது செலவுகள்	40,000		
தோற்றுவிப்பு செலவுகள்	60,000		
	20,12,000		20,12,000

கூடுதல் தகவல் :

(அ) 31 டிசம்பர் 2018 ல் சரக்கிருப்பின் மதிப்பு ரூ. 74,000

(ஆ) கொடுப்பட வேண்டிய சம்பளங்களின் மதிப்பு ரூ. 10,000

(இ) கடனாளிகள் மீது 5% வாராக்கடன் ஒதுக்கு உருவாக்குக

(ஈ) காப்புரிமைகள் மீது 10% பொறி மற்றும் இயந்திரம் மீது $7\frac{1}{2}\%$ மற்றும் நிலம் மற்றும் கட்டிடம் மீது 4% மும் தேய்மானம் நீக்குக.

31.12.2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான லாபம் மற்றும் நட்ட அறிக்கை மற்றும் அந்நாளுக்குரிய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.

23. The following information is given :

(a) Average capital employed Rs. 1,50,000

(b) Normal rate of profit 10%

(c) Present value of annuity of Re. 1 for five years at 10% as Rs.3.78

(d) Net profits for five years: 1st year Rs. 14,400: 2nd year Rs. 15,400: 3rd year Rs. 16,900: 4th year Rs. 17,400 and 5th year Rs. 17,900.

The profits included non-recurring profits on an average basis of Rs. 1.000 out of which it was deemed that even recurring profits had a tendency of appearing at the rate of Rs. 600 p.a.

You are required to calculate the goodwill:

(i) As per annuity method

(ii) As per five years' purchase of super profit: and

(iii) As per capitalization of super profit method.

பின்வரும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன :

(அ) சராசரியாக பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.1,50,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் 10%

(இ) ரூ.1க்கு ஐந்து ஆண்டுகளில் 10%க்கு ஆண்டு தொகை அட்டவணையின் நடப்பு மதிப்பு ரூ.3.78 ஆகும்.

(ஈ) ஐந்து ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் : முதல் ஆண்டுக்கு ரூ.14,400: இரண்டாம் ஆண்டுக்கு ரூ. 15,400: மூன்றாம் ஆண்டுக்கு ரூ.16,900: நான்காம் ஆண்டுக்கு ரூ. 17,400 மற்றும் ஐந்தாம் ஆண்டுக்கு ரூ. 17,900 ஆகும்.

24. The following is the Balance sheet of Weak & Co. as on 31.3.2019 :

Liabilities	Rs.	Assets	Rs.
1,00,000 equity shares		Land	1,00,000
of Rs.10 each	10,00,000	Plant and Machinery	2,30,000
Sundry creditors	1,73,000	Furniture and Fittings	68,000
		Stock	1,50,000
		Debtors	70,000
		Cash at bank	5,000
		P & L A/c	5,50,000
	11,73,000		11,73,000

Scheme of capital reduction was:

(a) The equity shares to be reduced to Rs. 4 per share

(b) Plant and Machinery to be written down to Rs. 1,50,000

(c) Stock to be revalued at Rs. 1,40,000

(d) The provision on debtors for doubtful debts to be created Rs. 2,000

(e) Land to be revalued at Rs. 1,42,000

Pass journal entries and prepare the reconstruction account.

31.3.2019 தேதியிட்ட வீக் & கோவின் இருப்பு நிலை பின்வருமாறு :

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
1,00,000 பொதுநிலை		நிலம்	1,00,000
பங்குகள் ரூ.10 வீதம்	10,00,000	பொறி மற்றும் இயந்திரங்கள்	2,30,000
பற்பல கடனீந்தோர்கள்	1,73,000	அறைகலன் மற்றும் பொருத்துக்கள்	68,000
		சரக்கிருப்பு	1,50,000
		கடனாளிகள்	70,000
		வங்கியிருப்பு ரொக்கம்	5,000
		இலாப நட்டக் க/கு	5,50,000
	11,73,000		11,73,000

மூலதனக் குறைப்பு திட்டம் :

(அ) பொதுநிலை பங்குகள் ரூ.4 ஆக குறைக்கப்பட்டது

(ஆ) பொறி மற்றும் இயந்திரங்கள் ரூ.1,50,000 ஆக குறைக்கப்பட்டது

(இ) சரக்கிருப்பு ரூ.1,40,000 என மதிப்பிடப்பட்டது

(ஈ) கடனாளிகள் மீது ரூ.2,000 வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக

(உ) நிலம் ரூ.1,42,000 என மறுமதிப்பீடு செய்யப்பட்டது.

குறிப்பேட்டுப் பதிவுகளை தருக மேலும் புனரமைப்பு கணக்கையும் தயாரிக்க.

———————